முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 20-2-59 | வெள்ளி | ஒலி: 39

ஊராள வந்தோரே!

ஊட்டிக்துப் போகாதீர்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

25. தமிழ் மறை.

அன்புள்ள மாதவி,

சென்ற கடிதத்தில் உனக்கொரு புதிர் போட்டிருந்தேன். நீ ஏதேதோ யூகம் செய்து எழுதியுள்ளாய்! உன் யூகங்களிலுள்ள அறிவை நான் மெச்சினாலும் அவை சரியல்ல என்பதையும் கூற வேண்டியவனாக இருக்கிறேன். எத்தனையோ நாடுகளைப் பற்றிச் சொன்னேன்; மக்களைப் பற்றிச் சொன்னேன்; அவர்தம் நாகரிகம் பற்றியும், இலக்கியம் பற்றியும், அந்நிலங்களை ஆண்ட அரசர்கள் பற்றியும், ஏனையோரைப் பற்றியுமெல்லாம் எழுதினேன். இத்தனைக்கும் மத்தியில் எந்தையர் நாடாம் செந்தமிழ் நாடு பற்றியும், அந்நாட்டுக்கே உரிய மூத்துப் பழுத்த பேரிலக்கியங்கள் பற்றியும், ஆண்ட மன்னர் தம் வீரமும் விவேகமும் பற்றியெல்லாம் எழுதவில்லையே என நீ எண்ணி என்னை உஷார்ப்படுத்துமுன், உரிய இடத்தில் அவர்களைப் பற்றிச் சொல்லவே நபிகள் நாயகத்தைச் சற்று காத்திருக்கச் செய்துள்ளேன். உலக வரலாற்றை எழுதியோரெல்லாம், வெல்ஸ் முதல் நேரு வரை—ஏனையோரும்—ரோம் சாம்ராஜ்ய வீழ்ச்சியையும் பாரசிகத்தின் வரலாற்றையும் குறிப்பிட்ட பின்னர் நேரே, இஸ்லாமிய மதத் தோற்றம் பற்றியும், இஸ்லாமிய மன்னர்களால் உலகப் போக்கில் ஏற்பட்ட மாற்றம் பற்றியும் பேசினார்களே தவிர, காவிரிக் கரையில் கன்னித்தமிழ் பேசி, இமயத்தை எல்லையாக்கி, கடல் முழுதும் கலம்விட்டு வாணிபம் செய்து, கலையும் காவியமும் வளர்த்து இலட்சிய வாழ்க்கை வாழ்ந்த தமிழரைப் பற்றி—தமிழ் மன்னர்களைப் பற்றி—குறிப்பிடவே இல்லை; குறிப்பிட்டவரும் கோடி காட்டினார்களே தவிர, உலக வரலாற்றில் தமிழரும் தமிழ் மன்னர்களும் பெற்றிருக்க வேண்டிய இடத்தைத் தந்தார்கள் இல்லை. காரணம், நம் வரலாற்றை நாமே உணர்ந்து தொகுத்து வகைப்படுத்தாதது தான்! கல்வெட்டுக்கள் காட்சிப் பொருள்களாகவே நின்றன; செப்பேடுகள், சிந்துவாரற்று மண்ணிலே வெகு காலம்வரை மறைந்தே கிடந்தன. வரலாறு பற்றிய 'புறச்சான்றி'ன் நிலை இவ்வாறாக, 'அகச்சான்று' பகரும் இலக்கியங்களோ வரலாற்றுக் கண்கொண்டு ஆராயப்படவில்லை. இதன் விளைவாகத் தமிழனின் வரலாறு, இருட் குகையாயிற்று. ஆராய்ச்சி விளக்கேற்றி மறைந்து கிடக்கும் செல்வம் காணும் முயற்சியுடையோர் வெகு சமீப காலத்திலேயே இங்கு தோன்றினர். நமது முயற்சியின்மை, உலக வரலாற்றில் உரிய இடத்தை இழக்கச் செய்தது. அசோகனையும் ஹர்ஷனையும் அறிந்தவர்கள் சேரன் செங்குட்டுவனையும் கரிகாற் பெருவளத்தானையும் அறியாமல் போயினர். அரசியல் கலையின் தந்தையாக பிலேட்டோ மதிக்கப்பட்டான்; பிலேட்டோவைவிட உயரிய முறையில் அரசியல், சமூகவியல், காதலியல் ஆகியவற்றைப் பற்றி ஒப்பற்ற கருத்துக்களை நல்கிய வள்ளுவர் உலக வரலாற்றில் இடம் பெறாமல் போயினார். ஹோமரின் காவியம் பெற்ற அந்தஸ்தை இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரம் பெறவில்லை. ரோம் நாகரிகமும் கிரேக்க நாகரிகமும் பேசப்படும் அளவுக்கு, இந்த நாகரிகங்களுக்கெல்லாம் முந்தியதும் முதன்மையானதுமான தமிழ் நாகரிகம் பேசப்படவில்லை. வருந்தி வகையறியாது விழிப்பதைவிட, சிந்தித்து செயலாற்றுவது மேல் என்ற எண்ணத்தில்தான் ஒரு சில கடிதங்களில் தமிழரின் வாழ்க்கை பற்றிய சில உண்மைகளைச் சொல்லலாமென்று இருக்கிறேன்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட இதிகாச காலத்திலேயே தென்னகத்தில் தமிழ் மன்னர்கள் சீருடன் வாழ்ந்ததற்குச் சான்றுண்டு. தொல்காப்பியரின் காலம் பற்றியும் தமிழின் தொன்மை பற்றியும் நிலவுலகில் மனித இனம் தோன்றிய கதையைச் சொன்ன போதே உனக்குச் சொன்னேன். இராமாயணக் காலம் கி. மு. 6-ம் நூற்றாண்டு என்றொரு செய்தியுண்டு. வடக்கே, அயோத்தியில் இராமன் முடிசூடுவதாக இருந்த பொழுது, இலங்கையில் இராவணனும், தென்னகத்தில், கிஷ்கிந்தையில் வாலியும் ஆண்டார்கள், தென்னகத்துக்கே உரியதான சிவநெறி அவர்கள் நெறியாக இருந்தது. கிஷ்கிந்தை என்று அழைக்கப்படுவது இப்பொழுதுள்ள பெல்லாரி மாவட்டமாகும். இலங்கையில் இராவணனும் கிஷ்கிந்தையில் வாலியும் ஆண்டபொழுது, தமிழ் மன்னர்களும் ஆண்டதற்குச் சான்று இருக்கிறது. வானர சேனைகளுக்கு வழி கூறும் சுக்ரீவன் பாண்டியர்களின் தலை நகரமான கவாடம் என்ற நகர் பற்றியும், சோழ பாண்டிய நாடுகள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசுகிறான். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் நடந்ததாகக் கருதப்படும் பாரதத்தில், பாஞ்சாலியை மணக்க வந்த மன்னர்களில் பாண்டிய மன்னனும் ஒருவனாகக் குறிப்பிடப்படுகிறான். ராஜசூய யாகம் செய்த சகாதேவன் பாண்டிய நாட்டில் நுழைந்ததாகக் குறிப்பொன்றும் காணப்படுகிறது. இச்செய்திகள் பாரதத்தின் ஆதிபர்வத்தில் காணப்படுகின்றன. சோழர்களும் பாண்டியர்களும் மலையாவிலிருந்து சந்தன எண்ணெய் கொண்டு வந்ததாகவும் பாரதம் பேசுகிறது. பாரதப் போர் நடந்தபொழுது, கட்சி வேறுபாடின்றித் தமிழ் மன்னர்கள் அப்போர்களில் ஈடுபட்ட படைகளுக்கு உணவளித்து உதவியிருக்கிறார்கள். இந்த இதிகாசக் குறிப்புகளை எப்படி முழு ஆதாரமாகக்கொள்ள முடியும் என நீ கேட்கக் கூடும். முடியாதுதான்! ஆனால், கற்பனை என்றாலும், தொன்மைமிகு கற்பனையான இதிகாசங்களே தமிழ் மன்னர்களைப் பற்றிப் பேசுவதால் தமிழரின் தொன்மைக்கு மேலும் ஒரு ஆதாரமாக அதைக் காட்டினேனே தவிர வேறில்லை.

தமிழரின் முதல் நூல் தொல்காப்பியம். சர்ச்சைக்குரிய அதன் காலத்தை மிகத் தொன்மையானது என்று குறிப்பிடுவதே பொருந்தும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தமிழர் வாழ்க்கைபற்றி அறிய நமக்கு நல்ல சான்றுகள் உண்டு. முடியுடை மூவேந்தர்களில் மிகச் சிறந்தவனான கரிகாலன்—இமயத்திலே புலி இலச்சினை பொறித்த சோழன்—கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்டான். அவனைப் பற்றிப் பிறகு எழுதுவேன். கி. மு. சகாப்தத்தில் ஆண்ட சிறந்த தமிழ் மன்னன் கரிகாலன் என்பதைப் போல, அப்பொழுது தோன்றிய சிறந்த நூல் திருக்குறளாகும். அது இன்றும் தமிழ் மறையாய் விளங்கி தமிழர்தம் நெறிபிறழா வாழ்க்கைக்கு வேலியாகி, அவர் பண்பாட்டை உலகறியச் செய்து கொண்டிருக்கிறது!

வள்ளுவர் குறள் எழுத சிறப்பான—சூழ்நிலைகள் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும்-சைவம் சமணம், பௌத்தம், ஆரியம் போன்ற வெவ்வேறு நெறிகள் தமிழ் மண்ணில் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்த நேரம். இந்நெறிகளுக்கிடையே ஏற்பட்ட பூசல்களால் தமிழரின் செம்மையுற்ற வாழ்க்கை சிறப்பிழந்து விடுமோ என அஞ்சிய வள்ளுவர், இப் பல்வேறு நெறிகளையும் ஐயந்திரிபறக்கற்று, அவற்றின் மெய்ப் பொருளைக் கண்டறிந்து, தம் அனுபவம் காட்டிய வழியில், எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வினத்துக்கும் பொருந்தும் வகையில் மதச் சார்பற்ற நீதி நூலாகத் திருக்குறளை இயற்றினார். நீதியை வெறும் நீதியாகச் சொல்லிவிடாமல், நீதியை இலக்கியமாக்கிச் சொன்ன பெருமை வள்ளுவருக்கு உரியது.

வரலாற்று ரீதியிலே நாம் அறியக் கூடிய முதல் தமிழ்ச் சிந்தனையாளர் வள்ளுவர். அரசியல் கலையில் வல்லுநர்கள் எனக் கருதப்படும் பிலேட்டோ. டெமாஸ்தனிஸ், சிசரோ ஆகிய அனைவரினும் தலை சிறந்த அரசியல் மேதை வள்ளுவர் என்பதை அவருடைய 'பொருட்பாலை'ப் படிக்கும் எவரும் ஒப்புக் கொள்ளுவர். பிலேட்டோவின் அரசியலும், டெமாஸ்தனிசின் குடியாட்சி உணர்வும், சாக்ரடீசின் சிந்தனை வாதமும், புத்தரின் அற உணர்வும், கன்ஃப்யூஷியசின் ஒழுக்க போதனையும், அரேலியசின் அரச நீதியும், கௌடில்யரின் ராஜ தந்திரமும், இத்தனைக்கும் மேலாகத் தமிழரின் உயர்நெறியும் சர்ரா

[தொடர்ச்சி பக்கம்—6]

விற்பனையாகிறது!

நாடோடி மன்னன்

வெற்றி விழா மலர்

(எம்ஜியார் பிக்சர்ஸ் வெளியீடு)

அறிஞர் அண்ணா
அவர்களின் கருத்தோவியம்!

எம். ஜி. ஆர். அவர்களின்
"யாருக்கு வெற்றி" என்ற சிறப்புக் கட்டுரை!

அரசியல் தலைவர்கள், இலக்கியப் பேராசிரியர்கள், கலைஞர்கள் ஆசிரியவர்களின் ஐம்பதுக்கு மேற்பட்ட கருத்துரைகள்!

★ எண்பதுக்கு மேற்பட்ட வண்ணப் படங்கள்!

★ எம். ஜி. ஆர். அவர்களின் மூவண்ண உருவப்பட மேல் அட்டை!

★ 64 பக்கங்கள்; முழுவதும் ஆர்ட் தாள்கள்!

விலை ரூ. 1-25 தான்.

[மலர் கிடைக்கப் பெறாதவர்கள் தபால் பதிவுக் கட்டணம் சேர்த்து ரூ. 2 அனுப்பிப் பெற்றுக்கொள்க. 10 பிரதிகளும் அதற்கு மேலும் வாங்குவோருக்கு 20 சதவீதம் விற்பனைக் கழிவு உண்டு. முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே மலர் அனுப்பப்படும். வி. பி. பி. மூலம் அனுப்புவதில்லை.]

ஐடியல் பிரிண்டர்ஸ்,
97, பிராட்வே — சென்னை—1.

வெள்ளி 20—2—59 சென்னை

‘கரித்துண்டு’!

நாட்டிலே இயங்குவது மக்கள் நலன் பேணும் திறன் படைத்த அரசு என்றால், அது எதிர்நோக்கும் பிரச்னைகள் எண்ணற்றவையாகும்!

இல்லாமையை வளர்க்கும் பொல்லாத வறுமையை விரட்டவும், கல்லாமையைக் கொன்று அறிவாலயங்கள் அமைக்கவும், ‘எல்லாரும் இந் நாட்டு மன்னர்’ என்ற ஏட்டுத் தத்துவத்தை உண்மையாக்கவும்- ஓர் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஏராளமாக இருக்கும்!

ஆனால், தமிழகத்து அரசவையில் அமருகின்ற பெரு வாய்ப்பைப் பெற்றவர்களோ—நாட்டுக்குத் தேவையான இத்தகைய திட்டங்களை—அவசரமாகச் செய்து தீர வேண்டிய அவசியப் பிரச்னைகளை ‘ஆமை வேகத்தில் கவனிக்கவும் விரும்புவது கிடையாது!

தேவைகளை உணராத மக்கள் சேவகர்களோ, எதிர்க் கட்சிகளின் பலத்தை ஒடுக்கி—சிறகை ஒடிக்கும் செயலில் மட்டும் ஈடுபடத் தயங்குவதில்லை!

நல்லரசு நேர்வழி செல்ல, தட்டிக் கேட்கும் எதிர்க்கட்சி தேவை—என்ற அரசியல் ரகசியம் குறள் தோன்றிய காலத்திற்கும் மூத்த உண்மையாகும்! இதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள ஒரேவழி எதிர்க்கட்சிகளைத் தலையெடுக்க ஒட்டாது தடுப்பதுதான் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்!

அந்தத் திருப்பணிக்குத் தேவையான எண்ணிக்கை பலம் இருக்கிறது; அது வளர்த்த ஆணவம் இருக்கிறது; ‘அடுக்குமா’ என்று அதட்டிக் கேட்டால் சட்டம் இருக்கிறது — இவைகளின் துணையோடு எதிர்க்கட்சிகளின் வளர்ச்சிக்கு அணைபோடும் மற்றுமொரு புதிய சட்டத்தை இப்போது உருவாக்கி இருக்கிறது, சென்னை அரசு!

“பொது இடங்களில் ஆபாசத் தடுப்பு சட்டம்” என்ற பெயரில் பொதுச் சுவர்களில் ஆபாசமாக எழுதுவதையும், சுவரொட்டிகள் ஒட்டுவதையும் தடைசெய்து ‘கைதூக்கி’களின் ஆதரவோடு சட்டமொன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

“ஆபாசம்”—சட்டத்திலே புதைந்து கிடக்கும் இந்தச் சொல் எதைக் குறிக்கிறது என்பதுதான் புரியவில்லை.

சுவரொட்டிகளில் உள்ள வாசகங்களிலே ஆபாசமான சொற்கள் காணப்படுகின்றனவா? அல்லது சுவரொட்டிகள் ஒட்டுவதே ஆபாசமாகத் தென்படுகிறதா?

மந்திரிமார் அடிக்கடி பவனி செல்லும் வீதிகளில் — உலக விருந்தாளிகள் உலா வருகின்ற தெருக்களில்—மின் விளக்குகளும், வண்ண வளைவுகளும் அலங்கரிக்கின்ற நேரத்தில், கண்ணைப் பறிக்கும் சுவரொட்டிகளும் இருப்பதை ஆளுங் கட்சியினர் விரும்பவில்லையா?

சுவரொட்டிகள் ஒட்டுவதும், சுவரில் எழுதுவதுமே ‘ஆபாசம்’ என்றால், இது நகரின் அழகு காக்க வந்த சட்டமல்ல; அரசியல் ரீதியில் நாட்டிலே உள்ள மற்ற எதிர்க்கட்சிகளின் குரல்வளையை நெரிக்க எடுத்துக்கொண்ட முயற்சியே யாகும்!

பண பலமற்ற எதிர்க்கட்சிகள் நம் நாட்டில் பல இருக்கின்றன; அவைகளைப் பின்பற்றுகின்ற மக்களும் உண்டு! ஆகவே அத்தகைய கட்சியினர் தங்கள் கொள்கைகளைத் தனி ஏடுகள் மூலமோ — பொது மேடைகள் வாயிலாகவோதான் பிரச்சாரம் செய்யவேண்டும். அந்த முயற்சிக்கும்கூட வசதியற்றவர்கள் இன்று சுவர்களைப் பயன்படுத்தும் சிக்கன முறையில் ஈடுபடுகிறார்கள்!

பணப் பெட்டியின் பக்க பலமற்றவர்கள் தான் கரித்துண்டுகளின் தயவைத் தேடுகிறார்கள்!

ஆகவே, சட்டத்தின்மூலம் இதையும் தடுத்துவிடும் நோக்கம் கொண்டு ஆபாசம் என்ற அடைமொழியோடு இந்தப் புதுச் சட்டம் நுழைகிறது! ஆனால், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கையிலே கரித்துண்டை எடுப்பவர்கள் எந்த நாட்டிலும் விடுதலை விழாவுக்கான நாளை சுவற்றிலே எழுதித் தீர்த்த பிறகுதான் கீழே எறிந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஆட்சி மறந்துவிடக்கூடாது!

சுவரொட்டிகளின்மூலம் மக்கள் மன்றத்தின் கவனத்தைப் பெருமளவு கவர்ந்துவிட முடியும் என்ற ரகசியத்தை உணராதவர்களல்ல, இன்று சட்டத்தை நீட்டும் ஆளவந்தாரும்!

காங்கிரஸ் மாநாடுகளுக்கென்று கண்ணைப் பறிக்கும் சுவரொட்டிகளை அச்சிட்டவர்கள்தான் அவர்கள்! ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளைப் புள்ளி விபரங்களோடு விளக்குகின்ற வண்ணச் சுவரொட்டிகள் பலவற்றை ஒட்டியவர்கள்தான் அவர்கள்!

ஆனால், அத்தகைய சுவரொட்டிகளை ஒட்ட சந்து முனைகளும், தெருச்சுவர்களும் அவர்களைப் பொறுத்தவரையில் தேவையற்றிருக்கலாம். ஏனெனில் சர்க்கார் பணிமனைகள் அவர்களது விளம்பரச் சாவடிகளாகப் பயன்படுகின்றன! பொது நூல் நிலையங்களில் — அஞ்சலகங்களில்— புகைவண்டி நிலையங்களில் — மூவண்ணக் கொடி பறக்கும் சுவரொட்டிகளை — பண்டிதரின் படம் பொறித்த தேசீய விளம்பரங்களை ஏராளமாகக் காணுகிறோம்!

செங்கோலின் துணையுடன் பலம் சேர்க்கின்ற அரசினர் ‘ஆபாசம்’ என்ற பெயரில் ஆழக்குழி தோண்டிப் புதைக்க விரும்புவது, எதிர்க்கட்சிகளின் செல்வாக்கைத்தான்!

ஏனெனில் ‘எது ஆபாசம்’ என்ற முடிவுக்கு வரவேண்டியவர்கள் அரசினராக இருக்கிறார்கள்! அவர்களுக்குப் பிடிக்காதவை அனைத்தையும் ஆபாசம் என்று தடை செய்ய—தண்டனை விதிக்க வழி அமைத்துக் கொண்டுவிடுகிறார்கள்!

உதாரணத்திற்கு ஒன்று சொல்லலாம்; இப்படி தனிச் சட்டம் இல்லாதிருந்த நாளிலேயே ‘தீண்டாமைச் சுவரொட்டிகள்’ தடுக்கப்பட்ட நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க முடியாது!

‘சாதி ஒழிந்த சமுதாயத்தை உருவாக்கி வருகிறோம்’ என்று முழங்கிக் கொண்டிருக்கிற இதே சென்னை அரசினரே ‘தொடாதே என்னை’ என்று சொல்லும் திமிர் பிடித்த சாதி வெறியனைச் சிறைக் கனுப்புவதாகச் சுவரொட்டி ஒன்று வெளியிட்டார்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு!

முற்போக்குவாதிகள் அரசினரின் துணிவைப் புகழ்ந்தனர்; சமுதாய சீர்திருத்தவாதிகள் இந்தத் துணிகர முயற்சியைப் பாராட்டினா!

ஆனால், என்ன ஆயிற்று? குறுகிய காலத்திலேயே அந்த நற்கொள்கையைச் சொல்லும் சுவரொட்டிகளை வாபஸ் பெற்றது அரசாங்கம், யாரோ சிலருக்குப் பிடிக்கவில்லை அவை — என்ற காரணத்தைக் காட்டி!

நாட்டுக்கு மிக மிகத் தேவையான —மக்கள் மன்றத்தின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற அந்தச் சுவரொட்டி ‘ஆபாசம்’ என்ற பட்டியலில்தான் சேர்ந்து விட்டது; அன்று! இதே நிலையில்தான் ஆட்சிபீடத்தினருக்குப் பிடிக்காதவைகள் மட்டும் இனி ‘ஆபாச’மாகிவிடும்; தடுக்கப்பட்டுவிடும்—இந்தத் திடீர் சட்டத்தின் பின்னால் மறைந்து கொண்டிருக்கும் வஞ்சகமும் இதுதான்!

காவியுடை தரித்த கமண்டலமேந்திகள் — அவைகளையும் வீசி எறிந்துவிட்டு நிர்வாணமாகத் திரிந்த ‘கும்பமேளா’க்களை அனுமதிக்கின்றவர்கள் —

பண்பாடு மறந்து — பதவித் தேன் குடித்த வெறியில் வேற்று நாடு சென்று ஆடவர் கரம்கோர்த்து மேற்கத்திய நடனம் புரிகின்ற பெண்கள்குலவைரிகளை அங்கமாகக் கொண்டிருக்கும் அரசினர்—

ஆயிரம் தெய்வங்களையும்—அவைகளின் வரலாற்றிலே உலவுகின்ற பல்லாயிரம் வெட்கக் கேடான நிகழ்ச்சிகளையும் தடைசெய்ய முடியாத தன்மானமற்றவர்கள் —

ஆலயக் கோபுரங்களில் காணச் சகிக்காத காமரசக் காட்சிகளைத் தீட்டி மகிழும் பக்தர்களைத் தட்டிக் கேட்கத் திராணியற்றவர்கள்—

பெண்ணினம் காணக் கண்கூசும் ‘கிருஷ்ண லீலா’ காட்சிகளுக்குப் புராண மெருகு கொடுத்து, வீட்டுக்குள் மாட்டிக் கொள்ளும் தெய்வீகத்தை வெட்டி வீழ்த்த முடியாத வெண்சாமரமேந்திகள்—

இனிமேல் எதைத்தான் ‘ஆபாசம்’ என்று தடுக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

கூ

★ கிதகை மண்டலம் ★

★ உருவக நாடகம், இது!
'உதகைக்குப் போகாதீர் ஊராள்வோரே' எனும் உத்தமர் குரலை, தத்துவப் பெரு நாடக மன்றத்திலே ஏற்றி கற்பனை வண்ணம் கொடுக்கப்பட்ட சிறு நாடகம்.

நடிகர்கள் :

கிள்ளையன்	...	வெள்ளையர் அரசு
கீசியம்	...	நம்மை ஆளும் தேசியத்தார்
கின்னவன்	...	தென்னக இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம்
தாய்க் கிழவி	...	நமது தாயக மக்கள்
ஊர்ச்சபையோர்	...	மாற்றம் தரும் காலம்
கோலாகலக்கன்னி	...	ஆடம்பரச் செலவுகள்

காட்சி-1

[கூனிக் குறுகிய கிழவி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள், வாயிற்படியில்! காற்றோ புயலோ வென ஓடி வருகிறான், கீசியம். அவன் வந்த வேகத்திலேயே பேச ஆரம்பிக்கிறான்.]

கீசியம்: [ஆத்திரத்துடன்] பொறுக்க முடியாது அம்மா; இனிப் பொறுக்க முடியாது. சகதியிலும், சேற்றிலும், வாழைக் கொல்லையிலும், சோளக் காட்டிலும் இரத்தத்தைக் கொட்டி நானும் என் தம்பியும் பாடுபட, எங்கிருந்தோ வந்த அனாதை எங்கள் செல்வங்களை, எடுத்துச் சூறை விடுகிறான். இங்கே செங் குருதி சிந்துகிறோம், நாங்கள்! அங்கே மங்கையின் இதழ்ரசம் அருந்துகிறான் அவன்! உப்புக்கும் புளிக்கும் நாங்கள் வாடுகிறோம், இங்கே! சப்ரமஞ்ச இன்பம் காணுகிறான் அங்கே!

தாய்: [திகிலுடன்] உண்மை யாடா மகனே? கிள்ளையன் அவ்வளவு அக்ரமக்காரனா?

கீசியம்: அவன் அக்ரமத்தைச் சொல்வதற்குச் சொற்கள் இல்லையம்மா! அவன் நம் வீட்டுச் சொத்துக்களை நமக்குத் தெரியாமல் அவன் வீட்டுக்கு அனுப்புகிறான். இதுமட்டுமா! நாம் இங்கே கஞ்சிக்கு வழியற்றிருக்கும்போது. அவன் கிதகை மண்டலத்தில் கும்மாளம் போடுகிறான்.

தாய்: ஆ! கிதகை மண்டலத்திற்கா போகிறான்? அவ்வளவு கிராதகனா அவன்?...தெருவில் வியாபாரம் செய்தவனைத் தூங்கும் இடம் வரை கூட்டி வந்தால் இதுவும் செய்வான்; இன்னமும் செய்வான்! ஏதோ அனாதை என்று பார்த்தால் தலைக்குமேல் ஏறுகிறானே! நீ பொறுமையாக இரு! அவனை நான் கேட்கிறேன்.

கீசியம்: [ஆத்திரமடங்கி] அம்மா! உனக்காகப் பொறுத்தேன். (தம்பி கின்னவன் வருவதைப் பார்த்து) வா, தம்பி, வா! அனாதைப் பயல் கிள்ளையன் செய்யும் அக்ரமத்தை கேட்டாயோடா?

தாய்: நீ ஏண்டா 'சின்னப் பிள்ளையிடம் கண்டதை எல்லாம் கூறிக்கொண்டு!

[கின்னவனின் ஆர்வத்தை தாயின் வார்த்தைகள், மங்க வைத்து விடுகின்றன; அதனால் கீசியம் தானே கின்னவனைவிட விஷயம் தெரிந்தவன் எனப் பெருமையடைகிறான்.)

காட்சி-2

[கிதகை மண்டல மாளிகை! குயிலிலே இனிய மொழியாள் கூட்டம் பாடுகின்றது. மயிலிலே சாயலிடையார் கூட்டம் அங்கும் இங்கும் நடை போடுகின்றது. பரிமள கந்தம் புகையாகி அந்த மண்டபத்தைச் சுகந்த மணத்திற்குள் ஆழ்த்துகிறது. பேரியாழ் எடுத்து ஒரு பங்கய விழிமங்கை இசை சேர்க்கிறாள். அந்த மண்டலத்துத் தலைவியாம் **கோலாகலக் கன்னி**க்கு அந்த யாழிசை பிடிக்கவில்லை.]

கோலாகலக் கன்னி: நிறுத்தடி! யாழ் வாசித்தது போதும். பேய்களும் விரும்பாத அந்த 'விரசம் தொனிக்கும் இசை.... வேண்டாம்... ....!......எனக்கு 'அவர்' வேண்டும்!

தோழி: எவரம்மா?

கோலா: அடிமைக்குலஉற்பத்தி முதல்வன்; அழகு உதாரன்; ஆதிக்கப் பேரழகன்; அறிவு மணம் பரப்பும் ஆதிபத்ய அழகன்;....அவன் வேண்டுமடி!

தோழி: யார், நம்ம கிள்ளையரா?

கோலா: உன் வாயிற்கு வெல்லக் கட்டி தர வேண்டும்! சேடி! போடி! தேடி வாடி! அவரைக் கூடி ஆடிக் குலாவவே!

தோழி: [சிரித்துக் கொண்டே] இதோ, எனக்குச் சிரமம் இல்லாமல் அவரே வருகிறார்!

[கிள்ளையன் வருகிறான். கிள்ளை மொழி பேசி நெஞ்சம் கிள்ளி அவனை வரவேற்கிறாள், கோலாகலக் கன்னி.]

கிள்ளையன்: அன்பே! ஏது இந்நேரத்தில் என்று கேட்கிறாயா? காதல் முற்றிவிட்டால் அதற்குக் கால வரையறை ஏது கண்ணே? மன்மதனார் பாணையத்தில் புகுந்துவிட்ட எனக்கு நீதான் மார்க்கம் காட்டவேண்டும். மதலை மொழி மாதே! மதன கலை ராணியே! (அணைக்கப் போகிறான்)

கோலா: இருங்கள்! இருங்கள்! ஒரு சந்தேகம். உங்களை ஊரை விட்டே துரத்தப் போவதாக கீசியம் சொல்கிறானே, உண்மையா? இனி நாம் சந்திக்கவே முடியாதா?

கிள்ளையன்: [அலட்சியம் மீதூர] ....ஆங்...!உளுத்த கொள்கைக் காரன்! அவனா என்னை ஊரை விட்டுத் துரத்தப் போகிறான்? இருக்கட்டும்! கக்கும் உடற் குருதியிலே அந்தக் காட்டுப் பயல் மிதக்கும் வண்ணம் கைச் சாட்டை ஓயும் மட்டும் அடிக்கப் போகிறேன்.

கோலா: [அவனுடைய சிவந்த கண்களை நோக்கியபடியே, கன்னங்களை வருடிக் கொண்டு] அம்மம்மா! கோபம் வந்ததும் தங்களுடைய வெள்ளரிப் பழக் கன்னம் கோவைப் பழ நிறமாகி விட்டதே! கோபம் தணிய மருந்தொன்றிருக்கிறது, கோமானே! அது வேண்டுமா?

[ஆமென்கிறான், கிள்ளையன்! கோபம் தணியும் மருந்தைத் தருகிறாள், அந்தக் கோமளவல்லி!]

காட்சி-3

[கீசியம் தன் கட்சியை எடுத்து ஊர்ச் சபையில் பேசுகிறான்.]

கீசியம்: ஊர்ப் பெரியவர்களே! எங்களுக்கு உரிய சொத்தை அபகரித்துக் கொண்டான் கிள்ளையன். வெளியூர்க்காரனை கிள்ளையன் 'வணிக அனாதை'யாக இங்கு வந்தவன். கடை வைக்க அனுமதித்தோம். பின் எங்கள் வீட்டிலேயே கொடி போட்டு விட்டான்! எங்கள் வாழ்வும் வளமும் அவன் காலடியிலே மெல்ல மெல்லச் சிக்கி விட்டன.

இப்போது நாங்கள் இங்கே சோற்றுக்குக் கின்னரம் போடுகிறோம்...அவன் எங்கோ இருக்கும் கிதகை மண்டலத்திற்கு ஓடுகிறான்!

நாங்கள் இங்கே இரும்பு அடிக்கிறோம்; கரும்பு நடுகிறோம்; உப்புக் காய்ச்சுகிறோம்; மாடு மேய்க்கிறோம்; காடு திருத்துகிறோம். அவன் அங்கே, பொருந்தாத குளிருக்குக் கம்பளி போர்த்திக் கொள்கிறான்; குளிர் பூஞ்சோலையைக் கண்டு களிக்கிறான்; மலைக்குறவர் பெண்களுடன் கை கோர்த்து ஆடுகிறான்; கோலாகலக் கன்னியுடன் 'குளிரில் வெப்பம்' காணுகிறான்!

கூறுங்கள், பெரியோர்களே! நீதியை ஆராய்ந்து அறிந்து கூறுங்கள். கூழுக்கு இங்கே திண்டாட்டம்; கிதகை மண்டலத்தில் அவன் கொண்டாடுகிறான், கொண்டாட்டம்! அடுக்குமா? ஆகுமா? நீதி கூறுங்கள்!

பொது மக்கள்: ஆமாம்! கீசியம் பேசுவது சரியே! அவர்கள் சொத்தை அவர்களிடமே தந்துவிட வேண்டும்.

[தூரத்தில் நின்று கொண்டிருந்த கிள்ளையன் இவைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். அவன் ஒரு சமயோஜிதப் புத்திசாலி. ஊர்ச்சபை இப்படித் தீர்மானித்த பிறகு அந்தத் தீர்மானத்திற்குத் தகுந்தமாதிரி தன் முடிவை மாற்றிக் கொள்கிறான், எனவே, கூட்டத்திற்குள் தைரியமாக வருகிறான்.]

கிள்ளையன்: நானே இவரிடம் சொத்தை ஒப்படைக்க இருந்தேன். உங்கள் தீர்ப்பு வேறு வந்து விட்டது. மிக்கமகிழ்ச்சி. இந்தாருங்கள், பெட்டிச்சாவி!

[தாய்க் கிழவியிடம் பெட்டிச் சாவியைக் கொடுக்கிறான், கிள்ளையன். அவள் யார் கையில் சாவியைக் கொடுப்பது என்று எண்ணுவதற்குள் கீசியம் கையில் வாங்கிக் கொள்கிறான்.]

வேதரத்தினத்துக்கு விளக்கம்!

★

"தாயைப் பார்த்த கண்ணால் தாசியைப் பார்க்கக் கூடாது" என்று ஆபாசச் சுவரொட்டி தடுப்பு மசோதா விவாதத்தில் சர்தார் **வேதரத்தினம்** குறிப்பிட்டார்.

தாசியைப் பார்க்கும் கண்ணால் தாயைப் பார்த்து, அதையும் பார்த்துவிட்ட தகப்பனையும் கொன்று குவித்த பக்தனின் கதை மதுரை திருவிளையாடற் புராணம் மகாபாதகம் தீர்த்த படலத்தில்தான் இருக்கிறது—என்பதை சர்தார் உணராதது ஏனோ?

உணருவீர்!

உருளேக்கிழங்கு வரியை எதிர்த்தது தி. மு. க!
வரி போட்டுவிட்டு
உதகையில் உல்லாசத்துக்கு வருகிறது, காங்கிரஸ்!

காட்சி-4

[காலம் மாறிற்று. கீசியம் இப்போது அந்த வீட்டை ஆள்கிருன். கிள்ளேயன் சென்ற வழியில் இவனும் செல்ல ஆரம்பிக்கிருன். இப்போது கிதகை மண்டலம் போவதற்கு இவனும் தயாராய் இருக்கிருன்.]

தாய் : எங்கடா போகிருய்?

கீசியம் : எங்கேயும் இல்லே! வந்து...

தாய் : சும்மா பயப்படாமே சொல்லுடா!

கீசியம் : [கனேத்தபடி]...ம்...... உன்னிடம் நான் ஏன் பயப்பட வேண்டும்?....கிதகைமண்டலம் போகிறேன்.

தாய் : கிதகை மண்டலமா? அந்தக் கிராதக மண்டலத்திற்குப் போகாதேடா!' நம் வீட்டில் பிடி அரிசி இல்லே. இந்நிலேயில் இது நமக்கு அடுக்காத ஆடம்பரமடா!

கீசியம் : ஆடம்பரம் இல்லாத மனிதன், அரை மனிதன்! கிதகை மண்டலம் போவதில் என்ன தப்பு? அதில் எத்தனே காசு செலவாகி விடும்?

தாய் : வேண்டாமடா; இந்த விபரீத யோசனே! கிமரிக்கனுக் கொடுக்க வேண்டிய கடனே ஏராளம்! கிஷியனிடமிருந்து வேறு புதிதாகக் கடன் வாங்கியிருக்கிருய்! இப்படித் தாறுமாருகச் செலவழித்தால் இந்தக் கடனேயெல்லாம் எப்படித்தான் தீர்ப்பது?

கீசியம் : இந்தப் புலம்பல் எனக்குத் தேவையில்லே! நீ என் காரியம் ஒவ்வொன்றுக்கும் உள் நோக்கத்துடன் தடைபோடுகிருய். தாயே தடுத்தாலும், தந்தையே வழி மறித்தாலும் போய்த் திருவேன், கிதகைமண்டலம்!

தாய் : போகாதேடா! புகழும் பணமும் பாழாகுமடா! மலேயேறி யாண்டவன் நிலேத்ததில்லே என்பது பழமொழியடா!

கீசியம் : [ஏளனமாக] .... ம் .... பழமொழி! படிக்காதவர்களே மிரட்டுவதற்கு ஏற்பட்ட பகை ஈட்டி! எங்களே ஒன்றும் செய்யாது!

தாய் : உனக்கு அழிவு வருமடா!

கீசியம் : வரட்டும்! எது வந்தாலும், அந்தக் கிதகை மண்டலம் கண்டே தீருவேன்!

[தாயை மீறிக் கொண்டு போகும்போது கின்னவன் வருகிருன்.]

கின்ன : ஏன் அண்ணை, அம்மாவின் சொல்லே மீறுகிருய்?

கீசியம் : கிதகை மண்டலம் போவது அந்தக் கிழவிக்குப் பிடிக்கவில்லேயாம்!

சின்ன : நிறுத்து! என் குரல் தான் என் தாயின் குரலாக ஒலித்தது, கொஞ்ச நேரத்திற்கு முன்! தம்பி என்ற முறையில் கேட்டுக் கொள்ளுகிறேன்; இந்தத் தகாத காரியத்தைக் கைவிடு! இதனுல் உன்னேத் தரணியே இகழும் நிலே வரும்!

கீசியம் : போடா முட்டாள்! சுக போகங்களே ரசிக்கத் தெரியாத மூர்க்கனே! பெட்டிச் சாவி கையிலிருக்கும்போதே இந்தப் பரந்த உலகிலுள்ள இன்பங்களே 'ஒருகை' பார்த்து விடவேண்டுமடா! அதைவிட்டு விட்டு...தித்திக்கும் பருவத்தில் திருநீலகண்டராகச் சொல்லுகிருயே!"

[கின்னவனே மீறி வெளியேறுகிருன்.]

சட்டம் தடுக்குமா?

★

"குளத்திலே நீராடிக் கொண்டிருந்த கோபிகைகளின் சேலேகளேத் திருடி மரத்திலே அமர்ந்து குழலூதிக் கும்மாளம் போட்ட கோபால கிருஷ்ணனின் படங்களேச் சுவர்களில் ஒட்டி "கிருஷ்ணபக்தி"யை வளர்த்தால் அது ஆபாச விளம்பரம் என்று அரசாங்கத்துப் புதிய சட்டம் தடுக்குமா?...."

"என்னமோ புரியவில்லே — எல்லாம் போகப் போகத் தெரியும்!"

காட்சி-5

[கிதகை மண்டலத்துக் கோலாகலக் கன்னியின் வீடு. கீசியம் நுழைகிருன். கோலாகலக் கன்னி வரவேற்கிருள்.]

கோலா : என் மடி கனக்க 'மனுநீதிப் பயிர் தழைக்க வந்த கொங்குக் கோமகனே! வருக! வருக! என் பருவப் பசியாற்ற வந்த பாண்டியனே வருக!

கீசியம் : ஆகா...'பாகு மொழி மாது' என்று புலவன் சொன்னது புளுகல்ல; புரிந்து சொன்ன பேருண்மை! பாவுரைத்த செம்பொருளே! பால் நிறத்து வெண்மதியே! நாவுரைத்த வடமொழியே! நந்தவனப் பூங்கொடியே! நிற்காது, இனிப் பொறுமை! நாவினிக்கும் காதல்நிலே காட்டி விடு, கண்ணே!

கோலா : காட்டி விடுகிறேன். ஆனுல், ஒரு சிறு ஐயம். கிதகை மண்டலம் போகக் கூடாதென்று அடம் பிடித்தானுமே, உங்கள் கின்னவன். அவன் ஏதாவது...

கீசியம் : என்ன செய்து விடுவான்...... கிள்ளேயனேப்போல் நான் கிள்ளுக்கீரையல்லடி! வீரனடி! தீரனடி! தர்ம சீலனடி! கடும் பகைக்குக் காலனடி!

கோலா : போதும் உங்கள் பிரதாபம்!—வாருங்கள் மாடிக்குப் போய்த் தணிக்கலாம் பருவதாகம்!

(இருவரும் போகிருர்கள்)

காட்சி-6

[கிழவி பேசுகிருள், கின்னவனுடன்]

கிழவி : கின்னவா! இது உண்மையடா! கிள்ளேயன் எப்படி அன்னியனே, அப்படியேதான் கீசியமும்! இந்த வீட்டுக்கு உரியவன், நீயடா! எங்கேயோ இருப்பவர்கள் ஏற்றம் கொள்ள, இங்கிருக்கும் உன்னே நான் வதைத்து வேலே வாங்கினேன்; பெட்டிச் சாவி உன் கையிலிருப்பது தான் நியாயமடா! என்ன மாபெரும் குற்றம் செய்தேன் ஐயோ!......

கின்ன : குற்றம் செய்தது, கிடக்கட்டுமம்மா! கொற்றத்தை மீட்க—அவன் கொட்டத்தை அடக்க வழி சொல்லம்மா!

கிழவி : ஒரே வழிதான் உனக்கு உண்டு. ஊரில் உன் கருத்தைப் பரப்பு. உத்தமர் கூட்டத்தைப் பெருக்கு. உன்மத்தர் கூட்டத்தின் ஊதாரித்தனத்தை எங்கெங்கும் பரப்பு. நீதி கிடைக்கும், போடா!

என் தலே மகனே! நீ தானடா என் கண்ணீரைத் துடைக்க வந்த காளே!

நன்றி செய்வார்கள் என வளர்த்தேன், இருபிள்ளேகளே! ஆனுல் பன்றிக்குப் பயிர் வளர்த்தேனடா! பெற்ற தாயின் பெருமையை நீ தானடா உணர்ந்தாய். அந்தப் பாதகர்கள் உணரவில்லேயடா! மட்டிக் குரங்குக்கு மாலேயின் அருமை தெரியும் என நினேத்தேனடா! சட்டிக் கரண்டி கறிச்சுவையை அறியும் என நினேத்தேனடா! கற்பைக் கணிகை யறியவாள் என நினேத்தேனடா! கிளியின் பெருமையைப் பூனே யறியும் என நினேத்தேனடா! நாட்டின் வறுமையை நிலப் பிரபுத்வ மேட்டில் இருப்பவர் அறிவரர் என நினேத்தேனடா!

கடைசியில் என் நினேப்பெல்லாம் பாலேயில் ஊற்றிய நீர் ஆயிற்றடா! என்ருலும் மலடி வயிற்று பிள்ளே போலே மானம் காக்கும் மறவர் போலே நீ ஒருவன் இருக்கிருய்! போய் வரடா, கண்ணே! பொது மன்றம் கூட்டிப் பாதகரின் செயல்களே எடுத்துச் சொல்லடா!

ஊர் ஒத்துழைக்க வில்லேயென்ருல்......"பட்டாக்கத்தி யேந்தி பனிமலேயில் புலிச் சின்னம் பொறித்தபரம்பரையே! கொட்டாவிவிட்டது போதும். அறப் பட்டாளம் அழைக்குது. வா! வா!" என்று கூறி, உன் கட்டளேக்குக் காத்திருக்கும் மூலபலப் படையை அழைத்துப் போடா!

நெற்றி பிளந்தாலும் நரம்பு அறுந்தாலும் — முடிவில் வெற்றி வெற்றியென பெட்டிச் சாவியோடு திரும்பி வாடா!

கின்னவன் : அப்படியே ஆகட்டும் அம்மா! முதலில் ஊரிலே நீதி கேட்பேன்...அது கிடைத்தால் மகிழ்வேன். இல்லேயெனில்...பெற்றெடுத்த மனிவயிறு கலங்கி அழுது வெளிவிடுகின்ற கண்ணீரின் சக்தியை அறியாத கண்மூடிகளுக்குக் களத்திலே அதைப் பற்றிய கட்டாய பாடத்தை நடத்திக் காண்பித்துவிட்டு பெட்டிச் சாவியோடு திரும்புவேன்; அம்மா! உன் மெல்லிய பாதங்கள்மீது ஆணே! (நியாயம் கேட்க ஊர்ச் சபைக்குப் போகிருன், கின்னவன்.)

— அடியார்

கும்பி எரியுது! குடல் கருகுது!

கோலேங்கிகளே!

உங்கட்கு ஊட்டி "குளு குளு" வாசம் ஒரு கேடா—

எனக்

குமுறிக் கேட்கிருன் ஏழை!

மனிதனின் கதை..

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

மாகக் கொண்டதுதான் திருக்குறள். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இந்த அரசியல் மேதையை, நீதி போதகனை, இலக்கியக் கலைஞனை, வரலாற்றில் குறிப்பிட மறந்தோர் வரலாற்றுப் பாதையில் உயர்ந்த வழி காட்டியாக நிற்கும் ஒரு கல்லைக் காணத் தவறி விட்டார்கள் என்றுதானே அர்த்தம்?

தொல்காப்பியர் வகுத்த இலக்கண வரம்பு கெடாவகையில் நீதி நூல் இலக்கியமாம் திருக்குறளை அருளியவர் வள்ளுவர். சுருங்கச் சொல்லல், விளங்கச் சொல்லல், இனிதாகச் சொல்லல், பயன்தரச் சொல்லல், வழுவின்றிச் சொல்லல் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமைய திருக்குறள் சிறந்து விளங்குகின்றது. ஓதுவதற்கு எளிது இந்நூல்; உணர்வதற்கு அரிது! நவில் தொறும் நயம் பயக்கும் இலக்கியம்! தமிழனுக்கு முறையான மறையில்லாமை கண்ட வள்ளுவர் இந்நூலை யாத்தார் என்பது பொருந்தும். உலகின் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொன்ன வள்ளுவர் அறனை வலியுறுத்தினார். சடங்குகளை அறத்தின் வழியாக அவர் கொள்ளவில்லை. மனத்துக் கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் என்றார். வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையை மூன்று பால்களாகவும், நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களாகவும் எடுத்துச் சொன்னார். அன்பை இல்லறத்தின் அடிப்படையாகவும் அருளை துறவறத்தின் அடிப்படையாகவும் வைத்தார். அன்பின் விரிவே அருள் எனவும் எடுத்துரைத்தார். துறவற நிலையில் மனத்தூய்மையும் புலனடக்கமும் வற்புறுத்திச் சொல்லப்பட்டன.

அரசியல் சமூகவியலை பொருட்பாலில் அழகுபட எடுத்துரைத்தார். உயிரினும் மானம் பெரிதெனவும், தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டென்றும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்றும் பொதுவுடைமை நீதியை சந்தேகமற எடுத்துச் சொன்னவர் வள்ளுவர். மனுவை முதலாகக் கொண்டு வள்ளுவர் குறளை வழி நூலாகச் செய்தார் என்ற பரிமேலழகருடைய கூற்றுக்கு ஆதாரமில்லை. பார்க்கப்போனால் சாதிப் பாகுபாடு முறையையும், உயர்வு தாழ்வையும் வெறுத்தவர் வள்ளுவர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது அவர் கொள்கை.

யாகத்தை—ஆரிய முறையைக் கண்டித்தவர் அவர். அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்று உபதேசித்தார். சான்றோர் பழிக்கும் வினையை ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யாதிருக்க வேண்டும் என்ற அவருடைய கோட்பாடு ஆரியநெறிக்கு முற்றிலும் முரண்பட்டது.

அகவாழ்வின் இரு துறைகளான களவியலையும் கற்பியலையும் வள்ளுவர் குறுகிய இரண்டடிக்குள் சித்தரித்துள்ள பெருமை எண்ணியெண்ணி வியக்கவேண்டிய செய்தியாகும்! சிறந்த தத்துவஞானியும், இசை மேதையும் நோபில் பரிசு பெற்றவருமான ஆல்பர்ட் ஸ்வைட்சர் திருக்குறளை உலகின் முதல் உன்னத நீதி நூல் எனக் குறிப்பிடுகின்றார்.

மேல் நாட்டுப் பேரறிஞர் பலரும் குறளை சிலாகித்துப் பேசியதோடு மட்டுமின்றித் தத்தம் மொழியிலேயும் மொழி பெயர்த்துள்ளனர்.

தமிழிலக்கியம் அவ்வளவும் அழிந்து போனாலும், குறள் ஒன்று நிலைத்திருந்தால்போதும், தமிழனின் பெருமையை என்றென்றும் சொல்லிக் கொண்டிருக்க!

மாதவி! தமிழ்த் தென்றல் திரு. வி.க. கூறுகிறார், "காந்தீயம் ஆத்மீகத்துக்கு அதிக முக்யத்துவம் கொடுக்கிறது. மார்க்ஸிசம் பொருளியலுக்கு அதிக முக்யத்துவம் கொடுக்கிறது. இந்த இரண்டில் எது அதிகமானாலும் தீமையே. இரண்டும் சம நிலையில் இருந்தால் மட்டுமே மனித வாழ்வு செம்மையுறும். இவ்விரண்டினையும் சம அளவில் வழங்குவதே திருக்குறள்."

உண்மை, மாதவி! தார்மீக நெருக்கடியில் சிக்கியுள்ள உலகிற்கு நல்வழி காட்ட குறளை விடச் சிறந்த நூல் வேறெங்கே உள்ளது?

அன்புள்ள

அகத்தியன்.

தனி அரசு

மார்ச் 15 முதல்

தமிழ் தினசரியாக வருகிறது!

★ அகில உலகச் செய்திகளுடன்

★ அன்றாட கழகச் செய்திகளுடன்

★ அரசியல் கேலிச் சித்திரத்துடன்

டபுள் டிம்மி பெரிய அளவில்

காலை, மாலை பதிப்பாக

வெளி வருகிறது!

தனிப்பிரதி 7 புதுகாசுகள்

ஆசிரியர்

ஏ.வி.பி.ஆசைத்தம்பி, எம்.எல்.ஏ.

ஆண்டு சந்தா ரூ 24/-

ஆறுமாத சந்தா ரூ 12/-

மூன்றுமாத சந்தா ரூ 6/-

மூன்று மாதத்துக்கு குறைந்து சந்தா கிடையாது

எல்லா இடங்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை

"தனி அரசு"

5. வில்லேஜ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-6.

புத்தன் உலவிய...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

"'அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சக்தியின் சன்னிதானத்திற்கு வந்து சந்தக் கவி பல பாடினேன்! அடியவனின் குரல் கேட்டு ஓடிவந்தாள் அன்னை. உன் மனோபீஷ்டம் நிறைவேற 125 உயிர்களைக் களபலி வையடா, மகனே—என்றாள். நானும் அப்படியே செய்து வருகிறேன்'—என்று போலீசாரிடம் அஞ்சாது கூறினானும் அந்த சாது!

"ஒரே ஊரில் தங்காத இந்த சாது, ஒவ்வொரு கொலைக்குப் பின்னரும், தன் வசமுள்ள பாட்டிலில் சிலதுளி ரத்தத்தைச் சேகரித்துக்கொள்வான். அது சக்தி தேவியின் நைவேத்தியத்திற்காம்!

"இவனுடைய சீடன் ஒருவன், சாக்கன்மூன்ஜீ எனும் கொல்லன்ஒருவனைக் கொன்று விட்டு ஓடிப் போய்விட்டான். கொன்றவன் இன்னும் அகப்படவில்லையாம்.

"இந்த வல்லபதாசின் சீடர்கள் இன்னும் போலீசாரின் கைக்குக் கிடைக்கவில்லை. அவர்களைக் கண்டுபிடிக்க போலீசார் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!"

—இத்துடன் 'பிளிட்ஸ்' தரும் செய்தி முடிகிறது!

கடவுளைக் கருணாமுதல்வன் எனக் கூறிப் பயனென்ன? குழந்தைகளின் கழுத்தை அவர் பெயரால் அறுக்கிறார்களே!

மத யானையின் கூக்குரலுக்கு இளகி திருமால் கருட வாகனத்தில் வந்து முதலை வாயில் இருந்த யானையைக் காப்பாற்றினார் என்று கூறிப் பயனென்ன? மனிதர்களை மாடுகளாக நினைத்து அறுக்கிறார்களே! கடவுளுக்குக் 'கருணாகரன்' என்ற பெயர் இருந்தென்ன; போயென்ன? கடல்நீர் மிகுந்தென்ன; போயென்ன ? காட்டில் மலர் மலர்ந்தென்ன; மாய்ந்தென்ன? கருவேலம் பழுத்தென்ன; வீழ்ந்தென்ன? கரடி மயிர் நீண்டென்ன; போயென்ன? இவற்றால், எதற்கும் பயனில்லை; யாருக்கும் பயனில்லை!

கிளைத்துப் புறப்பட்ட தென்னகத்தாரை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைத்தானும், கோசலைச் செல்வன்!

முளைத்து முனையரும்பாப் பச்சிளங் குழந்தைகளை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைத்தார்கள், 'ராம் துன்' பாடிய சாதுக்கள்!

போலீஸ், சாதுக்களை மட்டும் சிறையிலே போட்டிருக்கிறது!

பட்டிக் கன்று போன்ற தென்னாட்டாரை வெட்டிக் கையிலெடுத்து ஆடினளாம், காளி தேவி!

புட்டியில் ரத்தம் பிடிக்க மனிதரை வெட்டிக் கொன்றான், 'வல்லபதாஸ்' எனும் 'காளிதாசன்'!

போலீஸ், வல்லபதாசை மாத்திரம் விசாவதார் சிறையிலே அடைத்திருக்கிறது!

★★★

புத்தன் உலவிய நாட்டில் பிள்ளைக் கறி யமுதா?

"சண்ணோ! சீராளா!"

"ஏன்'ம்மா கூப்பிட்டாய்?"

"என்னவென்று சொல்வேனடா! நம் சத்திய தர்மத்திற்குச் சோதனை வந்திருக்குதடா! அன்னதானக் கொடி உயர்த்தி அடியவர்களுக்கெல்லாம் இன்றுவரை அமுது படைத்துப் போட்டோம். ஆனால் இன்று யாரும் அமுதுண்ண வரவில்லை. கடைசியில் ஒருவர் வந்தார். தொப்புள்வரை நீண்ட தும்பை மலர் போன்ற தாடி, தூய உடல், துலங்கும் திருநீறு, பார்த்தால் சைவப்பழம்போல் இருக்கிறார். அவர் கேட்டார், ஒருவகை உணவு! அவர் கேட்டதை நானும் உன் தந்தையும் கொடுக்க முடியாமல் தவிக்கிறோமப்பா!"

"அப்படியென்னம்மா அதிசயமான உணவு கேட்டார்?"

"பாலகனும் — பரம்பரையைக் காக்க வந்த ஒரு மகனும் இருக்க வேண்டும். தாயும் தந்தையும் மனமொத்து அந்தத் தலைமகனை அறுத்துச் சமைத்துப் போட வேண்டுமாம். அப்போதுதான் அந்தச் சைவர் உண்பாராம்!"

சீராளன் ஒப்புக்கொண்டானோ அல்லது ஒப்புக்கொள்ளவில்லையோ, சிறுத்தொண்டரும் அவர் பத்தினியும், அவனை அறுத்துச் சமைக்கத் தொடங்கினர்.

மாணிக்கம் கட்டி, வயிர இடை கட்டி, ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் வைத்து 'ஆராரோ' பாடிய தாய். தன் மகனின் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

தன்னை உதைத்தால் தென்றல் தான் தழுவியது என்று உதைத்த குழந்தையின் காலுக்கு ஓராயிரம் முத்தமிட்ட தந்தை 'கசாப்புக் கடைக்' கத்தியைக் கையிலே எடுத்துக் கொண்டார்.

பெற்ற பிள்ளையின் சங்குக் கழுத்தை அறுத்தார். பச்சைக் குழந்தையின் இரத்தம் பெருக்கெடுத்தது!

உதிரம் விழுகும் எனத் தெரிந்தும், உடல் நிலை கெடும் என அறிந்தும், பொங்கி வழியும் அழகு அழியும் என உணர்ந்தும் குழந்தைக்குத் தாயாகத் துணிந்து, இன்பம் பெற்று, பிள்ளையைப் பெற்றெடுத்த அவள், இப்போது தன் மகனைச் செங்குருதிச் சேற்றில் கிடக்கக் கண்டாள்!

"முத்தே! பவளமே! முக்கனியே! சர்க்கரையே! கொத்து மருக்கொழுந்தே! கோமளமே! கண்வளராய்......சாயக் கிளியே! சோலைக் குயிலே! சுந்தர மயிலே! குத்துவிளக்கே! குளத்துத் புறுவே! கற்பகக் கொடியே! கண் வளராய்!"...என்று தாலாட்டுப் பாடிய தாய், தன் மகனின் பிணத்தை எடுத்து உரலிலே வைத்தாள்.

குழந்தையின் உடலைக் குத்திப் புடைக்க, பெற்ற தந்தை உலக் கையெடுத்தார்!

'சதக் சதக்...சதக் சதக்' எனக் குத்தினர், கண்ணை மூடிக் கொண்டு! நகை முகம், கதிர் வீசும் கண்கள், கோவை இதழ்கள், கிளி மூக்கு, மெல்லிய சுருள் மயிர், பொன் அவிர்தலை, கீச்சுக் குரல்வளை, மழலை நா—அத்தனையும் கச கசவென ஆயின!

அவர்கள் பிள்ளைக்கறியைச் சமைத்தார்கள்!

பாலுக்கு ஞானசம்பந்தர் அழ, பனி மலையிலிருந்து கீழே இறங்கி வந்து தன் மனைவியைப் பால் கொடுக்கச் சொன்ன கருணை மூர்த்திக்குப் பெற்ற பிள்ளையை அறுத்துச் சமைத்து உணவு படைத்தார்கள், சிறுத்தொண்டரும், அவர் பத்தினியாரும்!

—இது தமிழ் நாட்டுப் புராணக் கதை; உளுத்துப்போன தத்துவத்தைவிளக்க வந்த அந்த காலப் புலவனின் கற்பனை!

ஆனால், இள வயதுப் பிள்ளைகளை இறைவன் பேரால் கொன்று தின்னுகிற கல்லிதயம் படைத்தவர்கள் இன்றுகூட உலவுகிறார்கள் எனக்கேட்டு அதிர்ச்சிக்குள்ளாகிறோம்!

புத்தர் பிறந்து உலா வந்த நாட்டிலிருந்துதான் — பண்டித நேரு பிறந்த 'கங்கைச் சமவெளியிலிருந்துதான் — லக்ஷ்மணபுரியிலிருந்துதான் இந்தச் செய்தி கிடைத்திருக்கிறது.

"காட்டு வெளியில் குழந்தையின் கதறல் கேட்டது. கதிர் அறுத்துக் கொண்டிருந்த உழவர்கள் கூக்குரல் வந்த காட்டு வெளியை நோக்கி ஓடினார்கள். அங்கே அவர்கள் கண்ட காட்சி பயங்கரமானது! மூன்று முரட்டுச்சாமியார்கள்ஒரு குழந்தையைக் கீழே போட்டு அறுப்பதற்குத் தயாராக இருந்தார்கள். உழவர்களைப் பார்த்ததும் அந்தச் சாமியார்களில் ஒருவன் ஓடிவிட்டான். நின்று கொண்டிருந்த இரண்டு பாதகர்களையும் பிடித்துப்போலீசில் ஒப்படைத்தனர், அந்த உழவர்கள்! **அந்தச் சாமியார்களிடமிருந்து பச்சிளம் பாலகன் ஒருவனின் மண்டையோடும் கைப்பற்றப்பட்டதாம்!"**

— இந்தச் செய்தியைத் தருகின்ற 'பிளிட்ஸ்' எனும் ஏடு மேலும் அதிர்ச்சி தரும் சேதிகளை அடுக்குகிறது.

"மூராதாபாத்துக்கு அந்தச் சாமியார்கள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டனர். அதற்குள் இந்தச் செய்தி காட்டுத் தீபோல பரவியது. ஊர் மக்களெல்லாம்கூடி 'பிள்ளை பிடிக்கும் பயல்களைப் பச்சை ரத்தத்தில் மிதக்க விடுங்கள்' என்று சத்தமிட்டனராம்.

"அந்தப் பாதகர்களில் ஒருவன் போலீசிடம் 'எங்களில் ஒருவனுக்குப் பால் மணம் மாறாத குழந்தைகளின் பச்சைக் கறியைத்தின்பதில் வெகு பிரியம்' என்றானும்.

"இதே மாதிரி பல சாது சாமியார்கள் அந்த வட்டாரத்தில் வேண்டுமளவு பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு போகின்றனராம்!

"சதானந்த் என்பவரின் காணமற் போன பிள்ளை இன்னும் தேடிக் கண்டு பிடிக்கப்படவில்லை.

"பிள்ளை பிடிக்கும் இந்த 'சாது சாமியார்கள்' கும்பல் கும்பலாய், கோவண ஆடை உடுத்திக் கொண்டு, கண்ணீர் மல்க 'கோசல ராமனை' துதி பாடிக் கொண்டு திரிகின்றனர்!

"ஊர் ஊராய்ப் போய், பெரிய மனிதர்கள் வீட்டில் தங்குகின்றனர். வாழையிலையில் வார்த்த நெய் ஓடையில் மிதக்கும் பல கறிச் சோறுதான் வேண்டுமாம். கொஞ்சம் குறைந்தாலும் சாமியார் கோபம் கொள்வார். 'பிடி சாபம்' என்பார். முன்பிருந்த புண்ணியங்களை மூலைக்கு ஓட வைத்து விடுவார்! இப்படி நம்பிக் கொண்டு கடன் வாங்கியாவது சாமியார்களின் கனிவான கடைக்கண் பார்வையைப் பெறுவதற்கு அந்தக் 'கிராமத்துப் பெரியவர்கள்' படாத பாடுபடுகிறார்கள்.

"பெரிய மனிதர் தன் பிள்ளையை சாமியாருக்குச் சேவை செய்யச் சொல்லுகிறார். பையன் மேல் அளவு கடந்த அன்பும், ஆதரவும் காட்டுகிறார், சாமியார். போகும்போது, தந்தை தாயிற்குத் தெரியாமல் சாமியாருடன் ஓடி விடுகிறான் பையன்! கூட வரும் பையனைக் காட்டு வழியில் கழுத்தை அறுக்கத் துணிகிறார்கள் சாமியார்கள்.

"இந்தமாதிரி சாமியார்களின் செயல்களை அடக்கி ஒடுக்க உத்திரபிரதேச உள்நாட்டு விவகார இலாகா துப்பறிபவர்களை இதற்கென நியமித்திருக்கிறதாம்!

"பிள்ளைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் கொல்லும் சாமியார்கள் வடக்கே — காந்தி பிறந்த சமஸ்தானத்தில் — ராஜகோட்டில் திரிகிறார்களாம்.

—இந்தச் செய்தியையும் 'பிளிட்ஸ்' தருகிறது.

"வல்லபதாஸ் எனும் அந்த சாதுச் சாமியார் இதுவரை 14 கொலைகளைச் செய்திருக்கிறானும். இன்னும் 111 கொலைகளைச் செய்தால்தான் அவன் சக்தி தேவியின்முன் எடுத்திருந்த தூய சபதம் நிறைவேறுமாம்! இத்தனைக்கும் அவன் வயது இருபத்தைந்தே!

"பதினெட்டாவது வயதில் இந்தப் புனித சேவையை, மேற்கொண்டான். இவன் தன் இளவயதில் காதலில் தோற்றவனாம்!

[தொடர்ச்சி பக்கம்—6]

காலிகட்கு அஞ்சோம்!

கண்களில் நீரைத் தேங்க வைக்கும் நிகழ்ச்சி யொன்று சென்னையில் நடந்தது, 17—2—59 அன்று!

"பொன்னனை திராவிடத்தை மீட்போம்" என்று சூளுரைத்த திராவிடப் பெண் குலத்தின் வீராங்கனை—மகளிர் மன்ற தலைவி சத்தியவாணிமுத்து அம்மையார் பேசிக் கொண்டிருந்தார், வண்ணாரப் பேட்டையிலே! அப்போது...

பொற்புடை முல்லைக் கொத்தில் புளியம்பூ பூத்ததுபோல மக்களுள் மாக்களாகப் பிறந்த சிலர் கல்லெறிந்தனர், கல்லிதயம் கொண்ட தில்லி மூலவர்களின் கோரப் பிடியிலிருந்து திராவிடத்தை மீட்க நினைக்கும் கள்ளமில்லா உள்ளத்தினர்மீது!

கல்விழுந்ததால் ஒரு பாலகனின் மண்டையுடைந்தது. உதிரம் பெருக்கெடுத்தோடியது.

மேடையிலே நின்று பேசிக் கொண்டிருந்த தாயுள்ளம் அந்தப் பிள்ளையை அழைத்தது. ஒழுகிவரும் ரத்தத்தை முந்தானையால் துடைத்தது. மீதியிருந்த ரத்தத் துளியை விரலிலெடுத்து அந்த வீரனுக்குத் திலகமிட்டது.

"மனிதர்களிலே பதராகப் பிறந்துவிட்டவர்கள், இந்த இளம் மகனைக் காயப் படுத்திவிட்டார்கள். அந்த துரோகிகளுக்கு நான் சொல்வேன். அன்றொரு நாள், பகை நாட்டான் உள் நாட்டில் தன் ஆதிக்கக் கால்களை நாட்ட நினைத்த போது, தந்தையையும், தனயனையும், கணவனையும் இழந்த ஒருத்தி, அன்றைய போருக்குத் தன் பச்சிளம் பாலகனை அழைத்து, பால்மணம் மாறா அவன் தலையில் எண்ணெய் தேய்த்து, வளைந்த வேலை நிமிர்த்திக் கொடுத்து, போர்க்களம் நோக்கிப் போய் வாடா கண்ணே என்று கூறினளாம்! அவன் வேலெடுத்து வரிப் புலியெனப் பாய்ந்து சென்ற பின் 'உன் மகனின் நிலை என்ன?' என்று கேட்டவர்களுக்கெல்லாம் 'ஊர் மீட்கச் சாகட்டும்' என்று அஞ்சாது கூறிய அந்த சங்ககால மங்கையை நினைவிலிருத்தி நானும் இந்த வீரனை என் பிள்ளையாக எண்ணி இரத்தத்தினால் திலகமிட்டு திராவிடத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு அனுப்புகிறேன். கத்திக்குப் பதிலாக அவனுக்கு மலர் மாலை சூட்டுகிறேன்"—என உணர்ச்சி மிகுந்து பேசினார், சத்தியவாணிமுத்து அம்மையார்.

காலிகள் கூட்டம் கண்ணுக்குத் தெரியாமல் ஓடி ஒளிந்தது!

சட்ட மன்றத்துச் சம்பவம் :

"ஈ அடிச்சான் கதை !"

எதிர்ப்புகள் கிளம்பின, பல கோணங்களிலிருந்தும் !

"இது ஜனநாயகத்திற்குக் கட்டப்படும் சமாதி!" என்றனர் நம்மவர்கள் !

"உரிமைக்கு உலை வைக்கும் சட்டம்; பொதுவுடைமைக்குக் குழி வெட்டும் பண்பு!" என்று வெதும்பினர், கம்யூனிஸ்ட் தோழர்கள் !

"அடுக்காது இது ; இதைத் தடுக்காமல் விடோம் !" என்று குரலெழுப்பினர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் !

"வேண்டாம் இந்தச் சட்டம்! வேண்டோம் இதை நாங்கள் !"—என்று வெறுப்புரைத்தனர் ஜனநாயகக் காங்கிரசார் !

என்ன பலன் ? இப்படிக் கிளம்பிய எதிர்ப்புகள் அனைத்தும் கொப்பளிக்கும் எண்ணிக்கையில் தூக்கி எறியப்பட்டு விட்டன ! எண்ணிக்கையில் மட்டும் உயர்ந்தோர் இந்த நாட்டு வரலாற்று ஏட்டிலே கறை பூசி விட்டனர் !

வெறும் தலையசைத்து நாட்டின் நிலைகுலைக்க வந்தோரின் தயவால், நிறைவேறி விட்டது, "ஆபாசச் சுவரொட்டிகள் தடுப்பு மசோதா" —18—2—59 அன்று !

அந்தச் சட்டம் நிறைவேறித்தான் தீரும் என்ற நிலை பிறந்த நேரத்தில், "இது அக்கிரமம்! அநியாயம் !!" என்றார், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சின்னதுரை !

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்? எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள்!"—இது அமைச்சர் பக்தவத்சலனார் செய்த கிண்டல் !

"எண்ணிக்கை பலத்தை மட்டுமே கைக்குள் கொண்டு ஏனோ, செங்கோலை வளைக்கின்றனர் அமைச்சர்கள் ! இது என்றென்றும் நிலைக்காது என்று எச்சரிக்கிறேன் ! . எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள் என்கிறார் அமைச்சர்; அதனால் கதையொன்று சொல்லுகிறேன் !"

—எனக் குறிப்பிட்ட அறிஞர் அண்ணா அவர்கள் கீழ்க்கண்ட கதையை எடுத்துரைத்தார் :

"பெரும் தனம் படைத்த சீமான் ஒருவர் இருந்தார். தனக்கு அதிகப் பாதுகாப்பு பலம் தேவையென்று விரும்பிய அவர், நாடெங்கும் தேடி அலைந்து நல்ல 'அடியாள்' ஒருவனைத் தேர்ந்தெடுத்தார்.

"அவனுக்கு மாதந்தோறும் தவறாது 1500 ரூபாய் சம்பளமும் தந்து, தன் மேல் கையை வைக்க எவன் துணிந்தாலும், அவன் தலையை உடைக்கப் பெரும் தடி யொன்றையும் தந்தார்.

"விசுவாசம் குன்றாத அந்த வேலைக்காரனும் கையில் தடியோடு காவல் காத்தான் ; இரவு பகல் எந்நேரமும் அவரை விட்டகலாது தலையை யுடைக்க எதிரியைத் தேடிக் கொண்டிருந்தான் !

"சீமானின்மேல் 'கைவைப்பார்' எவருமில்லை ; அவன் கைத் தடிக்கு வேலை தரும் காலமும் வரவில்லை !

"காத்திருந்தான் அந்தக் கடமைவாதி! ஒரு நாள், தனக்குத் தரும் சம்பளம் 'விரயம்' என்று கருதினானோ என்னவோ ; எப்படியாவது கைத் தடிக்கு வேலை தந்து விட வேண்டுமென்று முடிவு செய்தான்.

"விழிகளை அகலமாக்கி வழியிலே பார்வையைச்செலுத்திக் காத்திருந்தான்; திடீரென்று அவன் கண்கள், தன் முதலாளியின் முதுகிலே ஒரு ஈயைக் கண்டு விட்டன !

"அவரது முதுகைத் தொட்டதோடு மட்டுமல்ல ; திமிராகச் சவாரியும் செய்து கொண்டிருந்த பரிதாபத்திற்குரிய அந்த ஈயை நோக்கித் தடியை ஓங்கினான் ; பலம் கொண்ட மட்டும் தாக்கினான் !

"என்ன ஆகியிருக்கும் என்று கருதுகிறீர்கள் ?

"அவன் அடித்தது ஈயை ! ஆனால் செத்ததோ சீமான் !"

"அதைப்போல் எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியைத் தடுக்க முரடன் கைத்தடிபோல இந்தச் சட்டத்தை அமைக்கின்றனர். ஈ அடிப்பதாக எண்ணி சீமானைச் சாகடித்த முரடனைப் போல-இந்த சட்டம் ஜனநாயகத்தையே வீழ்த்தி விடும் என்று எச்சரிக்கிறேன்..."

—என்று சொல்லி, அண்ணா அவர்கள் தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்களுடன் சட்ட மன்றத்தை விட்டு வெளி நடந்தார்.

தொடர்ந்து மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளியே நடந்தார்கள்.

★ சிந்திக்கும் சிவப்பு! ★

"நமது அரசியலமைப்பு, மாநில சட்ட மன்றங்களின் அதிகாரங்களை, அதுவும் பொருளாதாரத் துறையைப் பொறுத்த வரையில், மிக மிகக் குறைத்து விட்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த நிலை கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஒவ்வாததுமட்டுமல்ல; பாராளுமன்ற முறைக்கே ஊறுதேட வல்லது. நாட்டு நலனுக்கேற்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநிலங்களின் பொறுப்பு மேலும், மேலும் வளர்ந்து வருவதையும், பொறுப்பு வளர வளர, அரசியல் சட்டம் மாநிலங்களுக்கு வகுத்திருக்கும் எல்லைக் கோட்டை, அவைகள் அடிக்கடி மீறுவதையும் நாம் காண்கிறோம். இந்தப் பிரச்சினை சாதாரணமானதல்ல! இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திட வேண்டுமானால்,இதற்கோர் முடிவு கண்டாக வேண்டும்."

"மேற் கூறிய மாநில—மத்திய அரசுகளின் பிரச்சினை கட்சி வேறுபாடுகளைக் கடந்தது. ஆனாலும் நாட்டுப்பற்றும் ஜனநாயகத்திலே நம்பிக்கையும் கொண்ட சக்திகளனைத்தையும் ஒன்றுசேர்த்திட வல்லது. போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும், சட்ட மன்றங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் !"

—இத்தகையதோர் கருத்து நாம் சற்றும் எதிர்பாராத இடத்திலேயிருந்து வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே நம் உள்ளத்திலெல்லாம் மகிழ்ச்சி பிறக்கிறது.

வியக்கத்தக்க வகையில் இந்தக் கருத்தினை வெளியிட்டிருப்பவர், ஒரு கம்யூனிஸ்ட்டுத் தோழர்—வங்கத்தைச் சேர்ந்தவர்—பூபேஷ் குப்தா என்பார் !

மத்திய அரசு மாநிலங்களை ஆட்டிப் படைக்கிறது—சூத்திரதாரிகள் டில்லியில்; சொகுசாக உலா வருகின்ற கொலுப் பொம்மைகள் இங்கே —என்று நாம் தினம் தினம்தான் சொல்லி வருகிறோம், ஆணித்தரமான ஆதாரங்களோடு !

இந்த அவல நிலையினை, ஆகாத முறையினை, அகற்றிட நாடு நமதாக வேண்டும், நமது நாடாம் திராவிடத்தின் ஆட்சி நம் கரத்திலே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வழிவகைகளையும் எடுத்துக் கூறுகிறோம், எதிர்ப்புகளையும் ஏளனங்களையும் பொருட்படுத்தாமல் எதையும் தாங்கிடும் இதயத்தினராக !

ஆகவே, மாநிலங்களுக்குத் தரப்படுகிற அதிகாரம் போதாது, மத்திய அரசின் ஆணைக்கு அவை கட்டுப்பட்டு நடந்திடும் போக்கு ஆகாது—இதற்கோர் மாற்றம் எம்முறையிலேனும் கண்டாக வேண்டும்—என்று நமது கழகத்தவர் எவரும் பேசுவதிலே வியப்பில்லை.

என்றாலும், நாம் நாள்தோறும் செல்லுமிடமெல்லாம் சொல்லி வருகின்ற கருத்துக்கு, செஞ்சட்டை முகாமிலிருந்தே இத்தகையதோர் ஆதரவு கிடைத்திடுவதுகண்டு நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படாமலிருக்க முடியாது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு